**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 68/2024 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு. சந்தோஷ் |
| Husband/Father Name | மூர்த்தி |
| Village /Area | சிறுவளையம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | ஆட்டோ ஓட்டுநர் |
| Age | 42 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.09.2025.

**(எதிரிகள் 2 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 16.12.2021 அன்று மகேந்திரவாடியிலிருந்து சிறுவளையம் வழியாக இரவு 11.30 மணி அளவில் ஜே.சி.பி வந்த போது சிறுவளையத்திலுள்ள கேசவன் விட்டின் அருகில் அதிக சத்தம் கேட்டது. அப்போது நான் வெளியே வந்து பார்த்த போது ஜே.சி.பி ஓட்டி வந்த நபரை 5 நபர்களில் ஒருவர் ஜே.சி.பி ஓட்டி வந்த ஓட்டுநரை ஒருவர் கத்தியால் தலையிலும் மற்றொருவர் கல்லால் மார்பு மீதும் மற்றொருவர் கொம்பால் ஜே.சி.பி ஓட்டி வந்த நபரின் முதுகில் அடித்தார்கள். மற்ற இருவரும் கைகளாலும் கால்களாலும் மேற்படி நபரை எட்டி உதைத்தார்கள். கூட்டம் சேர்ந்தவுடன் மேற்படி 5 நபர்கள் உங்களை கத்தியால் வெட்டி விடுவோம் என்று கூறி அங்கிருந்து தப்பித்துவிட்டார்கள். ஊர்காரர்கள் வந்தவுடன் மேற்படி ஜே.சி.பி ஓட்டுநரின் மைத்துனர் சம்பவ இடத்துக்கு வந்து ஆம்புலன்ஸில் அடுக்கும்பாறை மருத்துவமனைக்குஅழைத்து சென்றார். பிறகு மேற்படி ஜே.சி.பி ஓட்டுநர் இறந்து விட்டதாக தகவல் அறிந்தேன். சம்பவம் இரவில் நடைப்பெற்றதால்

ஆஜர் எதிரிகளை என்னால் அடையாளம் காணப்பிக்க முடியவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் 10 ஆண்டுகளாக ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். அந்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறவில்லை. நான் டமார் என்ற சத்தம் கேட்டு தான் நான் வெளியே வந்து பார்த்தேன். மகேந்திரவாடியிலிருந்து சிறுவளையம் வழியில் ஜே.சி.பி வந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. சத்தம் கேட்டு நான் வந்து பார்த்த போது ஜே.சி.பி ஓட்டி வந்த நபர் கேசவன் வீட்டினுடைய போர்ட்டிக்கோவை இடித்துவிட்டு இருந்தார். கேசவனுடைய வீடு புது வீடு என்று ச சொன்னால் சரிதான். சத்தம் கேட்டவுடன் 30, 40 நபர்கள் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். அங்கு கூடியிருந்த நபர்கள் தான் ஜே.சி.பி ஓட்டி வந்த நபரை கேசவன் வீட்டை இடித்ததால் தாக்கி கொலை செய்து விட்டார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீஸாருக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை. நான் பனப்பாக்கம் ஆட்டோ நிறுத்தத்தில் ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருவதால் போலீஸாரின் உதவி எனக்கு தேவை படுவதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பனப்பாக்கத்திற்கும் சிறுவளையத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 7 கிலோ மீட்டர்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.15 17:49:46 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.